பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 9.

<u>கடிதம் (1டி) எண்.137, பள்ளிக் கல்வி 3(1) துறை, நாள் 23.02.2017</u>

அனுப்புநர்
திருமதி. த. சபிதா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர்,
சென்னை–6 (இணைப்புடன்)

ஐயா,

பொருள் பள்ளிக் கல்வி – தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப் பணி – கருணை அடிப்படை பணி நியமனம் – திரு. ப.மேகநாதன் த/பெ. (மறைந்த) திரு. கே.பழனிவேலு (இடைநிலை ஆசிரியர்) – இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்யப்பட்டது – தேர்வாணையத்தின் இசைவு தெரிவிக்கப்படுதல் – தொடர்பாக.

பார்வை
1. அரசாணை (நிலை)எண்.80, தொ (ம) வே.வா.துறை, நாள் 2.3.2016.
2. தங்களின் கடித ந.க.எண்.6915/ஜே2/2016, நாள் 30.06.2016.
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண்.822/சிடி–சி2/2017, நாள் 02.02.2017.

-----

பார்வையில் காணும் அரசாணை மற்றும் கடிதங்களின் மீது தங்கள் கவனம் ஈர்ப்பதுடன், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, திருவாரூர் மாவட்டம், எண்ணக்குடி அரசு உயர்நிலைப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான திரு. கே.பழனிவேலு என்பவரின் மகன் திரு. ப.மேகநாதன் என்பாரை கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு, விதித்தளர்வு ஏதும் இல்லாத நிலையில், தனியரை அப்பதவியில் பணிநியமனம் செய்யப்பட்ட நாளான 10.05.2013 முற்பகல் முதல் திருவாரூர் மாவட்டக் கல்வி அலுவலரால் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தனியரின் பணியினை வரன்முறை செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, தேர்வாணையத்தின் இசைவினைப் பெற்றுத் தர தங்களால் அரசுக்கு அனுப்பப்பட்ட நிலையில், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதத்தில், திருவாரூர் மாவட்டம், எண்ணக்குடி அரசு உயர்நிலைப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான திரு. கே.பழனிவேலு என்பவரின் மகன் திரு. ப.மேகநாதன் என்பவரை கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில் 10.05.2013 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்யப்பட்டதற்கு தனது இசைவினை அளித்துள்ளது.

3. மேற்கண்ட நிலையில், தனியரின் பணியினை வரன்முறை செய்யப்பட்டதற்கான தேர்வாணையத்தின் இசைவினை தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், மேலும் தங்கள் கருத்துருவுடன் பெறப்பப்பட்ட தனியர் தொடர்பான பணிப்பதிவேடு மற்றும் அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது என்றும் அவற்றைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

நகல்
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
பிரேசர் பாலச்சாலை,
சென்னை – 3.
இருப்புக் கோப்பு / உதிரிக்கோப்பு